# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயராமன் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | பழனிகவுண்டர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 27.02.2025.

A1,A2 present. A3 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேச்சேரி, குட்டப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரவிகுமாருக்கு சொந்தமான ஓட்டல் கடையில் சப்ளையராக வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

நானும் ரவிகுமாரும் கொரோனாவிற்கு முன்பு ரவிகுமாருக்கு சொந்தமான டிவியை ரிப்பேர் செய்வதற்காக சின்னுசாமியின் வீட்டிற்கு

கொண்டு சென்றோம். அப்போது அங்கு சின்னுசாமி அவருடைய வீட்டில் இல்லை. சின்னுசாமி வீட்டிற்கு முன்பாக டிவியை வைத்துவிட்டு செல்லும்படி சொன்னதால் டிவியை வீட்டிற்கு முன்பாக வைத்துவிட்டு சென்றுவிட்டோம். அதன் பின்னர் ஒருவாரம் கழித்து டிவியை எடுப்பதற்காக நானும் ரவிகுமாரும் சின்னுசாமியின் வீட்டிற்கு சென்றோம். அப்போது ஒரு காவலர் இருந்தார். அவர் எங்களை எதற்காக வந்தீர்கள் என்று கேட்டார். நாங்கள் டிவியை ரிப்பேருக்கு கொடுத்திருந்தோம் அதை எடுக்க வந்திருப்பதாக சொன்னோம். போலிசார் சின்னுசாமி இறந்துவிட்டதாக கூறினார். வேண்டும் என்றால் விசாரணைக்கு என்னை அழைப்போம் என்று போலிசார் கூறினார். அதன்பின்னர் 1 மாதம் கழித்து போலிசார் என்னை சேலம் அஸ்தம்பட்டி கோர்ட்டுக்கு வரச்சொன்னார்கள். கோர்ட்டிலிருந்து சங்ககிரி போலிசார் என்னை அஸ்தம்பட்டி ஜெயிலுக்கு கூட்டிச்சென்றார்கள். ஜெயிலில் 5, 6 பேர்கள் மற்றும் எதிரிகளை வைத்து இவர்களை தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். அதன்பின்னர் என்னை சங்ககிரியில் விட்டுவிட்டார்கள்.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தபோது அந்த விசாரணையில் சாட்சி ரவிகுமாருடன் 18.05.2018ம் தேதி ரவிகுமாருக்கு சொந்தமான டிவியை ரிப்பேர் செய்ய சின்னுசாமியின் வீட்டிற்கு எடுத்து சென்றதாகவும்,

அப்போது அவரது மகன் சந்திரசேகரும் மற்றும் இருவரும் அங்கு இருந்ததாகவும், அப்பா இல்லை, டிவியை வைத்துவிட்டு செல்லுங்கள் என்று சொன்னதால் டிவியை வைத்துவிட்டு வந்துவிட்டோம் என்றும் மறுநாள் 19.5.2018ம் தேதி சின்னுசாமியை அவரது மகன் சந்திரசேகர் 2 பேரை கூட்டி வந்து சொத்திற்காக கழுத்தை இறுக்கி கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள் நாங்கள் டிவியை கொண்டு சென்றபோது சந்திரசேகர் 2 பேருடன் சின்னுசாமியை கொலை செய்யதான் வீட்டிற்குள் சென்றுள்ளார் என்று தெரிகிறது என்றும் சந்திரசேகரையும் அவர்களுடன் வந்த 2 பேர்களையும் எனக்கு அடையாளம் தெரியும் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு எதிரிகள் உள்ளூர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.